**சிலாபம் நகர சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 25 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சிலாபம் நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 200,655 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் மற்றும் ரூபா 308,207 பெறுமதியான இயந்திரம் மற்றும் உபகரணங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனங்கள் மற்றும் தள்ளு வண்டிகளின் பெறுமதி ரூபா 4,243,684 தொகை, இறுதி இருப்பு மீதியாக ரூபா 557,321 | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | மோட்டார் வாகனங்கள் மற்றும் தள்ளு வண்டிகள் ,இறுதி இருப்பு மற்றும் கடன் கொடுத்தோர் ஆகிய பெறுமதிகள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்த வழுவினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை மற்றும் கடன் கொடுத்தோர் ரூபா 658,961 இனால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தனர். | | |
| (iii) | தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்பு வைப்புக்கள் ரூபா 493,245 ஆன மீதிக்காக பெற வேண்டிய வட்டி வருமானம் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | பெற வேண்டிய வட்டி வருமானம் கணக்கு வைக்கப்பட்டிராத வழுவினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iv) | கடந்த வருடங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 237,525 பெறுமதியான 07 நிலையான சொத்து உருப்படிகள் கையிருப்பாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | இந்த சொத்துக்கள் இன்னும் களஞ்சியத்தில் காணப்படுகின்றமையால் அதனை விடுவித்ததன் பின்னர் உரிய சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 16 கணக்கு விடயங்களின் பட்டோலைகள் / பயன்பாட்டு புத்தகங்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின பிரகாரம் மீதிழகளுக்கிடையே இணங்காமைகளின் கூட்டுத்தொகை ரூபா 51,603,490 ஆகும். | பதிவேடுகள் திருத்தப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிவேடுகளின் பரிசோதனையின் போது பல வருடங்களாக முன் கொண்டு வரப்படுகின்றமையால், 2019 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை இணக்கம் செய்யும் போது அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பல வருடங்களாக முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 8,871,877 பெறுமதியான முற்பணங்கள் மற்றும் ரூபா 73,940 | பெற வேண்டிய பணத்தை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை | பதிவேடுகளில் பல வருடங்களாக காணப்படுகின்ற இணக்கமின்மைகள் காரணமாக இது |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான நானாவித வைப்புகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | தொடர்பில் தேடியறிந்து மீதிகளை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |
| (ii) | 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 18,991,395 பெறுமதியான கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிவேடுகளில் பல வருடங்களாக காணப்படுகின்ற இணக்கமின்மைகள் காரணமாக இது தொடர்பில் தேடியறிந்து மீதிகளை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 309,869,100 கூட்டுப் பெறுமதியுடைய 08 விடயங்களுக்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | இறுதிக் கணக்குகளுடன் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இது வரையிலும் இறுதிக் கணக்குடன் நிலையான சொத்துக்களின் மீதியினை இணக்கம் செய்த விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. கூடியளவு விரைவாக இந்த மீதிகளுக்குரிய பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படுமென அறிவிக்கின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழ்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ---------------------------- | --------------------------- | ------------------------- | -------------------------- |
| (அ) | நகர சபைகள் கட்டளைச் சட்டம். | | | |
| | 170 ஆம் பிரிவு | 01 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்படுகின்ற வீதவரி மற்றும் நிலுவை வாடகை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவிடுதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்படுகின்ற வீதவரி ஆதனங்கள் 1660 மற்றும் செயலாளரால் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்ட ரூபா 4,840,497 ஆன தொகை ஈட்டப்பட்டுள்ளது. |
| (ஆ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 571 | வைப்பு மீதியின் உள்ளடங்கியிருந்த காலாவதியான வைப்புக்கள் வருமானத்திற்கு எடுப்பதற்கு அல்லது உரிய சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(2) | வழங்கப்பட்ட முற்பணம் பணி நிறைவடைந்தவுடன், தீர்க்கப்பட வேண்டிய போதிலும், தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணத்தை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,885,243 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 40,382,877 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

#### 2.2.1 செயலற்ற வங்கிக் கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய சேமிப்பு வங்கியின் இலக்கம் 100070323659 ஆம் இலக்க கணக்கின் மீதியானது ரூபா 493,245 தொகை பல வருடங்களாக செயலற்றிருந்த காரணத்தால் 2018 ஆம் ஆண்டிற்கான வங்கியினால் வட்டி கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. | வட்டி கணிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டியதுடன், கணக்கின் மீதி தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பில் தேடியறிந்து மீதிகளை தீர்ப்பதறகு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |
| (ஆ) | மக்கள் வங்கியில் பேணிச் செல்லப்பட்டுள்ள இலக்கம் 763 மற்றும் 3397 கொண்ட 02 நடைமுறைக் கணக்குகளின் மீதிகள் முறையே ரூபா 1,244 மற்றும் ரூபா 24,686 ஆன பெறுமதிகள் தொடர்பில் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | குறித்த கணக்கு மீதிகள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இது தொடர்பில் தேடியறிந்து மீதிகளை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கின்றேன். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2018<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| மதிப்பீடு மற்றும் வரியும் | 22,384 | 22,966 | 22,770 | 37,198 | 22,508 | 22,483 | 11,089 | 37,002 |
| வாடகை | 16,467 | 16,535 | 12,369 | 34,716 | 42,400 | 36,307 | 14,988 | 30,550 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,000 | 1,244 | 1,235 | 9 | 1,831 | 1,722 | 941 | 781 |
| ஏனைய வருமானம் | 47,031 | 40,225 | 28,656 | 70,674 | 27,317 | 25,536 | 619 | 59,105 |
| மொத்தம் | 86,882 | 80,970 | 65,030 | 142,597 | 94,056 | 86,048 | 27,637 | 127,438 |

- ❖ சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் மீளாய்வாண்டிற்குரியதாக பட்டியலிடப்பட்ட வருமானத்தில் மேற்கொண்ட சேகரிப்புகள் மற்றும் கடந்த வருடங்களில் நிலுவை வருமானங்களில் மேற்கொள்ளப்பட்ட சேகரிப்புகளும் உள்ளடங்கியுள்ளது.

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து வருமானம் சேகரித்தலின் செயலாற்றல் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. சபை வீதவரியினை கணனிமயப்படுத்தியிருந்த போதிலும், அதனுடன் இணைந்த வருமானப் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான கணனி பிரதிகளை பெற்றுக்கொள்ள முடியாமையால் வீதவரியினை பட்டியலிடல், பெறுவனவுகள் மற்றும் நிலுவை மீதிகளின் | பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்பட வேண்டிய போதிலும், கணனி தரவுகளின் பிரதிகளை பெற்றுக்கொள்ளும் நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். | ஒட்டுமொத்த வருமானத்தில் 49.19% சேகரிக்கப்பட்டுள்ளது. நிலுவை வீதவரித் தொகையில் சுமார் 2 கோடிக்கு கிட்டிய தொகையொன்று வெல்ல பிரதேசத்திலிருந்து அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. அந்த பிரதேசங்களின் சட்டரீதியான நடவடிக்கை எடுத்து நிலுவை வீதவரியினை அறவிடுவதற்காக தடை விதிப்பதற்கு அசையும் ஆதனங்கள் |

| | | |
|---|---|---|
| சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | | இல்லாதிருந்ததுடன், அசையும் ஆதனங்களுக்காக அவர்களுக்கு உரித்துறுதி வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறெனின், அந்த வலயம் சுனாமி அபாயத்திற்குள்ளான வலயமாகும். உரித்துறுதி இல்லாதிருந்தமையால் அந்த பிரதேசங்களில் வீதவரியினை சேகரித்தல் மிகவும் சிக்கலானதாக நிலமை உருவாகியுள்ளது. |

### 2.3.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 01 ஆந் திகதியில் உள்ளபடியான வீதவரி நிலுவையானது ரூபா 37,002,095 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டினுள் பட்டியலிடல் ரூபா 22,966,000 ஆகும். ஆண்டினுள் சேகரிக்கப்பட்ட தொகை ரூபா 22,770,434 ஆகும். மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான மொத்த நிலுவை ரூபா 37,197,660 ஆகும். | நிலுவை வீதவரி துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுனாமி அபாய வலயத்தின் நிலுவை வீதவரி நீங்கலான எஞ்சிய நிலுவை வீதவரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 2.3.4 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை வாடகைகள் மற்றும் குத்தகை வாடகை ரூபா 30,550,274 ஆக இருந்ததுடன், ஆண்டினுள் பட்டியலிடல்கள் ரூபா 16,534,675 ஆனமையால் அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா 47,084,949 ஆகும். அவற்றுள் மீளாய்வாண்டின் ரூபா 12,368,891 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த மீளாய்வாண்டிற்காக நிலுவை கடை வாடகை செலுத்துவதற்காக கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், நீண்ட காலமாக குத்தகை வாடகை செலுத்தாத குத்தகையாளர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை முன்னெடுக்கின்றேன். |
| (ஆ) | 2013 ஆம் ஆண்டின் மதிப்பீட்டினை அடிப்படையாக | நிலுவை கடை வாடகையை துரிதமாக | 2013 ஆம் ஆண்டின் மதிப்பீட்டினை அடிப்படையாக |

| | | |
|---|---|---|
| கொண்டு கடை வாடகைகளை திருத்தம் செய்து அறவிடுவதற்கு சபை தவறியிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான நிலுவை கடை வாடகை ரூபா 34,716,058 ஆகும். | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொண்டு கடை வாடகை திருத்தமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. அந்த வாடகை தொகை உயர்வான பெறுமதி என்பதால் செலுத்த முடியாதெனவும், கடைகள் தம்மால் அமைத்துக்கொள்ளப்பட்டவை எனவும் அறிவிக்கப்பட்டமையால், 2019 மார்ச் 11 மற்றும் 12 ஆகிய இரு தினங்களிலும், சிலாபம் நகர சபையில் கடை உரிமையாளர்கள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் தலைமையில் கூட்டமொன்று நடாத்தப்பட்டது. அதன் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட்டு நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசித்துள்ளேன். |

**2.3.5 முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 71,590,235 ஆன மீதியொன்று நிலவிய போதிலும், பதிவேடுகளின் பிரகாரம் 2015 மற்றும் 2016 ஆகிய வருடங்களுக்காக முறையே ரூபா 11,888,728 தொகை மற்றும் ரூபா 1,256,169 ஆன மீதியொன்று காணப்பட்டது. | அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2016, 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களுக்கான முத்திரைக் கட்டண பட்டோலைகள் இது வரையிலும் எமக்கு கிடைத்திருக்காததுடன், எடுகோளாக்கப்பட்ட பெறுமதியொன்று இந்த வருடத்தில் கணக்கு வைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்

மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டிற்கான மாகாண சபைக்கு முன்வைக்கப்பட்ட 03 உப விதிகள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வர்த்தமானியில் வெளியிட்டிருக்கவில்லை. அத்துடன், 2018 ஆம் ஆண்டிற்குரியதாக உருவாக்கப்பட்ட 04 உப விதிகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | 2015 ஆம் ஆண்டிற்காக உருவாக்கப்பட்ட உப விதிகள் விடயப் பொறுப்பு அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடாமையால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட உப விதிகளின் சட்டரீதியான தன்மை தொடர்பான விடயங்களை தேடிப் பார்த்து விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) செயல்நடவடிக்கை திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயன்முன்னேற்றத்தினை பரிசோதிக்கும் போது சமூக அபிவிருத்தி பிரிவின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 865,000 ஆன நிகழ்ச்சித்திட்டங்கள் 15 ஆண்டினுள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | திட்டத்தின் பிரகாரம் உரிய செயற்திட்டங்களை துரிதமாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சமூக அபிவிருத்தி பிரிவின் கடன் கொடுத்தோர் ரூபா 176,830 தொகையான 04 நிகழ்ச்சித்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டதுடன், 05 நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்ற முடியாதுள்ளதாகவும், 04 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக உரிய இணைப்பு நிறுவனத்தினால் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன். |
| (ii) | கைத்தொழில் பிரிவின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மதிப்பீட்டு பெறுமதி ரூபா | உரிய காலப்பகுதியினுள் பணிகளை | தற்போது 11 கைத்தொழில்களின் பௌதீக |

| | | |
|---|---|---|
| 2,516,146 தொகையான 14 கைத்தொழில்களின் செயன்முன்னேற்றம் 10 சதவீதமான அளவில் காணப்பட்டதுடன், பௌதீக செயன்முன்னேற்றம் 25 சதவீதம் முதல் 50 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்படுகின்ற கைத்தொழில்களின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,980,500 ஆக இருந்தது. | நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயன்முன்னேற்றம் 100% ஆக இருந்ததுடன், 04 கைத்தொழில்களின் 10 சதவீத செயன்முன்னேற்றமும், ஒரு கைத்தொழிலின் 25 சதவீத செயன்முன்னேற்றமும் காணப்படுவதாக குறிப்பிடுகின்றேன். |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை எல்லையினுள் உருவாகும் மொத்தக் குப்பைகளின் அளவானது சுமார் 18 தொன் அளவானது திறந்த இடமொன்றிற்கு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், கூட்டெரு நிலையமொன்று இல்லாதிருந்தமையால் கூட்டொரு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. நகர எல்லையினுள் குப்பைகளை அகற்றுவதற்காக 105 ஊழியர்கள் மற்றும் 10 டிரக்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், சம்பளம் மற்றும் வாகனப் பராமரிப்பு செலவினமாக வருடமொன்றிற்கு ரூபா 48 இலட்சத்தினை செலவிட நேர்ந்துள்ளது. | சபையினால் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் முறையான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 05 சந்தர்ப்பங்களில் கூட்டெரு நிலையத்தினை ஆரம்பிப்பதற்கு காணிகள் கண்டறியப்பட்ட போதிலும், மக்களின் எதிர்ப்பின் காரணமாக இது தோல்வியடைந்திருந்தது. எதிர்காலத்தில் மற்றுமொரு பிரதேசத்தில் காணியொன்றினை தேடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஈ) நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030’’ இன் பிரகாரம் அடைந்துகொள்ளப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கான ஆயத்தம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | சபையினால் 08 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்காக இலக்குகள் இனங்காணப்பட்டு அந்த நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்ள பல்வேறு பணிகளை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ii) | மீளாய்வாண்டில் 05 உத்தேச நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன், அதன் செயன்முன்னேற்றம் 50 முதல் 99 சதவீதத்திற்கு இடைப்பட்டதாக இருந்தது. | எதிர்பார்த்த நோக்கங்களில் 05 இனை நிறைவேற்றியுள்ள போதிலும், அதில் நூறு சதவீத செயன்முன்னேற்றம் அடையப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபையின் அலுவலக வளாகத்திற்காக 2018 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 21 வளிச் சீராக்கி இயந்திரங்கள் வழங்கி பொருத்துவதற்காக ரூபா 2,951,449 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த இயந்திரத்தினை இயக்குவதற்குள்ள மின்சார இயலளவு போதுமானதாக இல்லாதிருந்தமையால் பயன்படுத்த முடியாதிருந்ததுடன், இயந்திரங்களின் உத்தரவாதக் காலமும் நிறைவடைந்திருந்தது. | தேவையினை தாமதமின்றி நிறைவேற்ற முடியுமானவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நகர சபை வளாகத்தில் பொருத்தப்பட்டிருந்த வளிச்சீராக்கல் இயந்திரங்களை இயக்குவதற்கு உள்ள மின்சாரத்தின் இயலளவு போதுமானதா இல்லாதிருந்தமையால் தற்போதளவில் போதியளவான மின்சார இயலளவுடைய மின்மாற்றியொன்றினை பொருத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் ஆயத்தப்படுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2018 திசெம்பர் மாதத்தின் போது 05 வேலை விடயங்களை நிறைவேற்றுவதற்காக பெறுகை அறிவித்தலொன்று பத்திரிக்கைகளில் | பெறுகை நடவடிக்கைகளில் அனைத்து வேலை விடயங்களையும் | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | வெளியிடப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 03 வேலை விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படாது கைவிடப்பட்டிருந்தது. | உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (இ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பொதுக் களஞ்சிய இருப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 33,570 தொகையான இருப்பானது பௌதீக ரீதியில் காணப்படவில்லை. | களஞ்சியத்தில் இல்லாத இருப்புகள் தொடர்பில் பொருத்தமான முறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பெறுமதி சேரி வரிக்காக (VAT) மாதாந்தம் மற்றும் காலாண்டு அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளும் போது ரூபா 1,002,778 ஆன தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள தொகையை அறவிடுவதற்கு அல்லது ஈடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | ரூபா 1,002,778 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள பெறுமதி சேர் வரி தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் கோரி, அந்த தொகையை எஞ்சிய வருடங்களுக்கு ஈடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தாழ்மையுடன் தெரிவிக்கின்றேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### 3.3.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் செயலாளர் பதவி பல வருடங்களாக வெற்றிடமாக உள்ளதுடன், பதிற் கடமைக்கு இரண்டாம் தரத்திலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருநுதார். மொத்த பதவியணியினுள் இரண்டாம் தரத்திலான வெற்றிடங்கள் 46 ஆகும். | உரிய வெற்றிடங்களை துரிதமாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரண்டாம் நிலையிலான வெற்றிடங்களில் 36 தீயணைப்பு பிரிவின் பதவியணியாகும். ஆட்சேர்ப்பிற்காக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |

**3.4 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்கான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | தவறுதலொன்றின் காரணமாக 2018 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டத்தினை தயாரிக்க முடியாதிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

**3.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2014 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியத்தில் நீண்ட காலமாக விநியோகிக்கப்படாது காணப்படும் ரூபா 301,845 பெறுமதியான 08 நிலையான சொத்துக்கள் காணப்பட்டதுடன், அந்த சொத்துக்களின் உத்தரவாதக் காலமும், நிறைவடைந்திருந்தது. | குறித்த சொத்துக்கள் தேவைப்பாட்டின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன், துரிதமாக குறித்த பணிக்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 04 உருப்படிகள் தற்போது விநியோகிக்கப்பட்டுள்ளதுடன், 02 உருப்படிகள் வெகுமதிகளாக கிடைத்துள்ளது. தற்போது பயன்படுத்துபவற்றை பின்னர் எடுப்பதற்கு களஞ்சியத்திலேயே வைக்கப்பட்டுள்ளதுடன், தேவைக்கேற்ப விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கின்றேன். |

**3.6 வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளயர்வாண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் போது 31 பொருள் வகைகளின் பற்றாக்குறையொன்று நிலவியதுடன், மதிப்பாய்வு அறிக்கைகளின் பிரகாரம் ஆயர்வேத நிலையம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள 04 சொத்து உருப்படிகளின் பெறுமதிகள் | பற்றாக்குறை தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த பொருட்களுக்காக பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அந்த பெறுமதியை அறவிடுவதற்கு உரிய மேற்படி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதுள்ளதாக தாழ்மையுடன் |

| | | |
|---|---|---|
| இல்லாதிருந்தமையால் பதிவேட்டிற்கு உட்படுத்த முடியாதிருந்தது. | | அறிவிக்கின்றேன். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் 75 பாதீட்டு விடயங்களுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீடு முழுமையாக எஞ்சியிருந்தது. | சரியான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டின் போது 1 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 19 பாதீட்டு விடயங்களுக்குரிய மதிப்பீட்டு ஒதுக்கங்கள் எஞ்சியுள்ளதுடன், அது தொடர்பில் தேடிப் பார்த்து கூடியளவு விரைவில் அதற்கு பதில் வழங்குவதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

### 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிறுவனத்தினுள் போதியளவான உள்ளக கணக்காய்வொன்று இடம்பெற்றிராததுடன், மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கண்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கண்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான உள்ளக கண்காய்வு திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், எனினும் உள்ளக கணக்காய்வின் சிற்சில குறைபாடுகள் ஏற்பட்டுள்ளமையால் 2019 ஆம் ஆண்டின் போது முடியுமான அளவில் உள்ளக கணக்காய்வினை மேற்கொள்வதாக தெரிவிக்கின்றேன். |